Registered with the Registrar of NewsPapers for India R. No. 62828 / 95
Date of Publication : 5th & 6th of Every month

| Regd. No. TN / CC (S) DN / 119 / 09-11 | Lincensed to Post without prepayment WPP No. TN / CC (S) DN / 51 / 09-11 |
|---|---|

வேணு : 17 செப்டம்பர் 2011 கானம் : 2



Published by V. Sankaran on behalf of Guruji Sri Muralidhara Swamigal Mission, New No. 2, Old No. 24, Netaji Nagar, Jafferkhanpet, Chennai - 600 083. and Printed by Mrs. Sri Kalaivani of Sri Maruthy Laser Printers, 200 (173), Peters Road, Chennai - 600 014. Editor : S. Sridhar.

**Related Websites : www.namadwaar.org**
**Email:contact@namadwaar.org**

ஸ்ரீ ஹரி :

மஹாரண்யம் ஸ்ரீஸ்ரீ முரளீதர ஸ்வாமிஜி
அவர்கள் அருளாசியுடன்

# மதுரமுரளி

தெய்வீக மாதப் பத்திரிகை




வேணு : 17 | செப்டம்பர் 2011 | கானம் : 2

Delivered by India Post www.indiapost.gov.in



2.8.2011 – [illegible]



10.8.2011 – [illegible]



21.8.2011 – சென்னை ப்ரேமிக பவனத்தில் கோகுலாஷ்டமி உற்சவம்




7.8.2011 - தங்கநல்லூர் ஸ்ரீகுரு விட்டல் ஸேவா டிரஸ்ட் பஜன் மேளா



ஆகஸ்ட் 21 - 30, 2011 - மதுரபுரி ஆஸ்ரமம்
கோகுலாஷ்டமி உற்சவம்



12.8.2011 - ஹாரண்யம்
ஸ்ரீகல்யாணஸ்ரீனிவாசபெருமாள்
கோவிலில் விளக்கு பூஜை



7.8.2011 - விக்கிரவாண்டி
ஆஞ்சநேயர் கோவிலில்
மஹாமந்திர கூட்டு பிரார்த்தனை



[illegible]
மஹாமந்திர கூட்டு பிரார்த்தனை





26.8.2011 - [illegible]



26.8.2011 - [illegible]

ஸ்ரீ ஹரி :
மஹாரண்யம் ஸ்ரீ ஸ்ரீ முரளீதர ஸ்வாமிஜி
அவர்கள் அருளாசியுடன்

# மதுரமுரளி

தெய்வீக மாதப் பத்திரிகை

வேணு:17 செப்டம்பர் 2011 கானம்:2

| | | | |
|---|---|---|---|
| மதுரமான மஹனீயர் - 186 | 04 | பத்திரம் செய்த நாமம் | 11 |
| பக்தர்களின் கேள்விகளுக்கு ஸ்ரீஸ்வாமிஜியின் பதில்கள் | 06 | குரு தரும் ஞானம் | 14 |
| பாகவத பழம் -18 | 08 | நாமம் சொல்லுவோம் | 23 |
| சனாதன புதிர் | 21 | மாலே மணிவண்ணா | 32 |
| ப்ருந்தாவன கண்ணன் | 30 | அப்பாலுக்கு அப்பால் | 34 |

**ஹரே ராம ஹரே ராம ராம ராம ஹரே ஹரே**
**ஹரே க்ருஷ்ண ஹரே க்ருஷ்ண க்ருஷ்ண க்ருஷ்ண ஹரே ஹரே**

காட்டில் உள்ள இரண்டு மூங்கில் மரங்கள் காற்றில் அசையும்பொழுது, ஒன்றோடு ஒன்று உரசிக்கொள்ளும். அப்படி உரசிக்கொள்வதாலேயே, அதில் நெருப்பு ஏற்படும். அந்த நெருப்பினாலேயே, இரண்டு மூங்கில் மரங்களும் எரிந்து போய் விடும்.

அதுபோல் மனமும், அறிவும், விசாரம் என்ற காற்றினால் உரசிக்கொண்டே இருந்தால், அதில் உண்டாகும் ஞான அக்னியினால் மனதும் அறிவும் அழிந்து போய், ஞான அக்னி தானே பிரகாசிக்கும். – ஸ்ரீமத் பாகவதம்

# ஸ்ரீஸ்வாமிஜியின் கீர்த்தனம்

ராகம்: ப்ருந்தாவன சாரங்கா தாளம் : ஆதி

1.அழகன் என்றால் இவன் தானன்றோ – கலந்து

பழகும் ஸ்வாமியும் இவன் தானன்றோ

2.ராஜாதி ராஜன் என்றால் இவன் தானன்றோ – பஜன

ஆனந்த பிரியனும் இவன் தானன்றோ

3.அன்பே வடிவானவன் இவன் தானன்றோ – நல்ல

பண்பின் உறைவிடம் இவன் தானன்றோ

4.ரசிகன் என்றால் இவன் தானன்றோ – அந்த

சசிவதனனும் இவன் தானன்றோ

5.அனாதி என்றால் இவன் தானன்றோ – முனி

மனதில் உறைபவனும் இவன் தானன்றோ

6.நண்பன் என்றால் இவன் தானன்றோ

துன்பம் தொலைப்பவன் இவன் தானன்றோ

7.கோபாலன் என்றால் இவன் தானன்றோ – அந்த

பூபாலனும் இவன் தானன்றோ

8.அன்னை என்றால் இவன் தானன்றோ – அன்று

மண்ணை உண்டவனும் இவன் தானன்றோ


9.தந்தை என்றால் இவன் தானன்றோ

எந்தை தெய்வமும் இவன் தானன்றோ

10.குரு என்றால் இவன் தானன்றோ

கற்பகத்தருவும் இவன் தானன்றோ

யாருடைய உண்மையான தெய்வ நம்பிக்கையையும் குலைக்கக் கூடாது. யார் ஆசைப்படுகின்றார்களோ, யாருக்கு வேறு வழியில்லையோ, யார் இந்த எளிமையான மஹாமந்திரத்தை, ஏற்றுக் கொள்ள தயாராக இருக்கின்றார்களோ, அவர்களுக்கு நாம் மஹாமந்திர கீர்த்தனத்தை ஆசையுடன் அளிப்போம்.



–மஹாரண்யம் ஸ்ரீமுரளீதர ஸ்வாமிஜி

The D Studio
www.dexterousinfo.com
Quality is never an accident
It is always the result of intelligent effort
www.vapssky.com
dex gamez
www.dexgamez.com
- Mobile Data Security Systems
- Multimedia Content Exchange
- Mobile Enhancement Utilities
- 3d Multiplayer Games

Roblock
Theft Recovery System for
Blackberry - Windows mobile - Sony Ericsson mobile phones

Roblock provides protection and safety from theft or losing your mobile phones and helps to retrieve it back. Now the users can forget the fear of losing their mobile phones by protecting it using Roblock software.

- SMS notification on SIM Change
- Remote WIPE memory card
- Recover contacts from lost phone
- Complete Stealth operations

contact@dexmobile.com
Ph: +91 960019777

# மதுரமான மஹனீயர் – 186

(டாக்டர். ஆ.பாக்யநாதன்)

உலகில் தெய்வத்தை பற்றி நமக்கு என்னவெல்லாம் தெரிந்திருக்கிறதோ, அவை அனைத்துமே மஹான்களும் சாஸ்திரங்களும் எடுத்து சொன்னதுதான். சாஸ்திரங்கள் சொல்வது உண்மை என்பதை, மஹான்களின் சொந்த அனுபவங்கள் நிரூபிக்கின்றன. மஹான்களின் அனுபவங்களை கொண்டுதான் தெய்வத்தை நாம் புரிந்து கொள்ள முடிகிறது. ராமக்ருஷ்ண பரமஹம்ஸரின் வாழ்வில் நிகழ்ந்த, அப்படிப்பட்ட ஒரு சுவையான தகவலை அண்மையில் ஸ்ரீஸ்வாமிஜி தெரிவித்தார்கள். அது அனைவரும் தெரிந்து கொள்ள வேண்டிய அவசியமான ஒன்று என்பதால், இவ்விதழில் உங்களுடன் பகிர்ந்து கொள்கிறேன்.

ராமகிருஷ்ண பரமஹம்சர் நாம் ஒருவருக்கொருவர் பேசிக்கொள்வது போல் அவருடைய தேவியான (காளி) பவதாரிணியுடன் பேசுவார். ஒருமுறை காளி அவரிடம் "ஞான குழந்தைகள் உன்னை தேடி வரும்" என்று கூறியிருந்தாள் . இதை கேட்டதிலிருந்து அந்த ஞான குழந்தைகளை பார்ப்பதற்கும் பேசுவதற்கும், அவர்களை கொஞ்சுவதற்கும், பரமஹம்சரின் மனதில் ஒரு அவா ஏற்பட்டது.

ஒரு தாய், பல நாட்கள் பிரிந்து இருந்த தன்னுடைய குழந்தைகளை பார்ப்பதற்கு, மாத்ரு வாத்சல்யத்துடன் எப்படி துடிப்பாளோ, அப்படி துடிப்பார் பரமஹம்சர். இந்த வாத்சல்யம் அதிகம் ஆகும்பொழுது கோவில் கோபுரம் மேல் ஏறிக் கொள்வார். "என் அருமை ஞான குழந்தைகளே ! நீங்கள் எங்கு இருக்கின்றீர்கள்? என்னிடம் வாருங்கள்" என்று தன் இரு கைகளையும் நீட்டி அழைப்பார். தன்னிடம் வரும் குழந்தைகளிடம் தெய்வாம்சம் இருப்பதை கண்டால் போதும்;



அவர்களிடம் எந்த தெய்வத்தின் அம்சம் உள்ளது என்பதை அறிந்து கொள்ள ஆசைப்படுவார்.

எப்படி அறிந்து கொள்வார் என்கின்றீர்களா? இரவில் அவர் தியானத்தில் அமர்ந்திருக்கும் பொழுது, தான் பகலில் கண்ட தெய்வாம்சம் பொருந்திய நபரை பாவனையாக, கண் முன்னே நிறுத்தி கொள்வார் . மானசீகமாக வில்வ தளங்களை கொண்டு, அவருக்கு அர்ச்சனை செய்து பார்ப்பார். அது ஏற்றுக் கொள்ளப்பட்டால், அவரிடம் சிவனுடைய அம்சம் இருப்பதை உறுதி செய்து கொள்வார். வில்வ தளங்கள் மறுக்கப்பட்டால், துளசி தளங்கள் கொண்டு அர்ச்சனை செய்து பார்ப்பார். அது ஏற்று கொள்ளப்பட்டால் விஷ்ணுவின் அம்சம் இருப்பதை உறுதி செய்து கொள்வார். இப்படித்தான் அந்தந்த தெய்வத்துடைய வழிபாடுகளை மானசீகமாக செய்து, அந்தந்த தெய்வத்தின் அம்சம் யாரிடம் உள்ளது என்பதை உறுதி செய்து கொள்வார்.

இதிலிருந்து நமக்கு மற்றொரு அரிய விஷயமும் புலனாகின்றது. அந்த அந்த தெய்வத்தை எப்படி எதனால் பூஜை செய்ய வேண்டும் என்று மகான்கள் நமக்கு கற்பித்து கொடுத்துள்ளார்களோ, அப்படியே பூஜை செய்ய வேண்டும். ஏனென்றால், அவைகளில் எல்லாம் ஆழமான அர்த்தங்கள் உள்ளன என்பதும் புலனாகின்றது .

தன்னை அறிந்து ஒழுகுவோர், தன்னை மறைப்பார்; தன்னை அறியாதவரே, தன்னைக் காட்டுவார். – பாம்பாட்டி சித்தர்



# பக்தர்களின் கேள்விகளுக்கு ஸ்ரீ ஸ்வாமிஜி அவர்களின் பதில்கள்

கேள்வி: ஸ்ரீமத் பாகவதத்தில், நாரதரை பார்த்து, "பக்குவம் உள்ளவர்களுக்குத்தான் என் தரிசனம் கிடைக்கும்" என்று பகவான் கூறுகின்றான். நாரதருக்கே இந்த கதி என்றால், பக்குவம் இல்லாத என் போன்றவர்களின் கதி என்ன?

பதில்: பக்குவம் இல்லாதவர்களுக்கு, தன்னுடைய தரிசனம் கிடைக்காது என்று சொன்னானே தவிர, பக்குவம் இல்லாதவர்களுக்கு நான் அருள் செய்யமாட்டேன் என்று சொல்லவில்லையே! அவனுடைய நாம கீர்த்தனத்தை செய்து கொண்டே இருந்தோமானால், அவன் அருள் செய்து கொண்டே இருப்பான். அந்த அருள் நம்மை பக்குவப்படுத்தும். அதன் பிறகு பகவானே தன்னுடைய தரிசனத்தை தருவான்.

கேள்வி: யோகப்ரஷ்டன் என்றால், சென்ற பிறவியில் ஸாதனைகளை செய்தும், அதனுடைய ஸித்தியை அடையாதவன் என்று பொருளா?

பதில்: ஆம்; அப்படித்தான். சென்ற பிறவியில் ஸாதனைகளை செய்து, அது ஸித்தியாகாதவர்கள், அடுத்த பிறவியில் அதை தொடர்ந்து செய்து, முக்தியை அடைவார்கள். இவர்கள் மட்டும் யோகப்ரஷ்டர்கள் அல்ல. இதே பிறவியில் நாம் பலரை பார்க்கின்றோம். ஆரம்ப காலத்தில் ஜபம், தியானம் என்று தீவிரமாக பகவத் பக்தி செய்து வந்தவர்கள், காலகட்டத்தில் பணம், புகழ், ஸித்திகள் என்று எதிலாவது மயங்கி, முன்பு போல் ஸாதனைகளில் ஈடுபடாமல் இருப்பார்கள். இவர்களும் யோகப்ரஷ்டர்களே!

கேள்வி : ஒருவனை தீயவழிகளில் அழைத்து செல்வது எது?

பதில் : அவனுடைய வாஸனை.

கேள்வி : அவனுடைய வாஸனைதான், அவனுடைய கெட்ட பழக்கங்களுக்கு காரணம் என்று ஸாதாரண மனிதர்களுக்கு

வேண்டுமானால் தெரியாமல் இருக்கலாம். ஆனால் மஹான்களுக்கு நன்றாக தெரியும் அல்லவா?

பதில் : நிச்சயமாக தெரியும்.

கேள்வி : அவனுடைய தவறான வழிக்கு, வாஸனைதான் பொறுப்பு என்னும் பொழுது, மஹான்களும் அவனை தீயவன் என்று தூஷிப்பானேன்?

பதில் : அவர்களுக்கு வாஸனைதான் காரணம் என்று தெரிந்து, அவனை தூஷிக்காமல் மஹான்கள் விட்டார்களானால், அவன் மேலும் மேலும் தீய வழிகளில் சென்று, அந்த தீய வாஸனைகளை ஸ்திரப்படுத்திக் கொண்டுவிடுவான். மேலும் தீய வாஸனைகள் இருப்பதனால், அதை அப்படியே அனுமதிக்க வேண்டும் என்று அவசியமில்லை. அந்த தீய வாஸனை, தலை தூக்காத அளவிற்கு, ஸத்வாஸனையை சேர்த்து கொள்ள வேண்டும். அதற்கு நல்ல மனோபலம் வேண்டும். தெய்வத்தின் அருளும், குரு அருளும் ஒருவனுக்கு மனோபலத்தை தரும்.

நாம், நம் பிறந்த குலம், நாம் வகிக்கும் பதவி, நம்மிடம் உள்ள ஐஸ்வர்யம், நம்முடைய அழகு, நம்முடைய அறிவு, நாம் பெற்ற கல்வித்தகுதிகள், நம்முடைய சாமர்த்தியம் இவைகளை நினைத்து நினைத்து, பெருமைப்படுகின்றோம். ஆனால், இதற்கெல்லாம் மேலாக, நம்முள் இருக்கும், உயர்ந்த ஆத்ம ஸ்வரூபத்தை நினைத்து, யாரும் பெருமைப்படுவதில்லை. என்ன விந்தை இது!

–மஹாரண்யம் ஸ்ரீமுரளீதர ஸ்வாமிஜி



# பாகவத பழம் (18)

**பாகம் 2 – அத் 5**

– ஸ்ரீஸ்வாமிஜி

நாரதர் தொடர்ந்தார், “ஸாதுக்களுக்கு, வேண்டியவர்கள் வேண்டாதவர்கள் என்பது கிடையாது. எல்லோரையும் சமமாகப் பார்க்கக் கூடியவர்கள். இருந்த போதிலும் என்னிடம் ஒரு விசேஷமான கருணையைச் செய்தார்கள். நான் சாப்பிட்ட அன்னம் ஸாதுக்களுடைய உச்சிஷ்டான்னம். அதனுடைய மஹிமை எனக்குத் தெரியாது. அது எனக்குள் ஒரு மாயா ஜாலத்தை நிகழ்த்த ஆரம்பித்தது. மருந்துகளுக்கு வியாதியை குணமாக்கும் தன்மை உள்ளது போல், மஹான்களின் உச்சிஷ்டத்திற்கு மனதின் மலங்களை நீக்கும் சக்தி உள்ளது. அதுவும் இங்கு “ஸக்ருத் ஸ்ம புஞ்ஜே” என்று கூறுகிறார். அவர் ஒருமுறைதான் உச்சிஷ்டான்னத்தை சாப்பிட்டாராம்.

*உச்சிஷ்ட்ட லேபான் அனுமோதிதோ த்விஜை:* ।

*ஸக்ருத்ஸ்ம புஞ்ஜே ததபாஸ்த கில்பிஷ:* ॥

*ஏவம் ப்ரவ்ருத்தஸ்ய விஷுத்த சேதஸ:* ।

*தத் தர்ம ஏவ ஆத்ம ருசி: ப்ஜாயதே”* ॥ *(1-5-25)*

எனக்கு விளையாட்டுகளில் ஆசை போயிற்று. கண்கள் தானாக மூடிக்கொண்டன. அதில் ஆனந்த பாஷ்பம் ஏற்பட்டது. தானாகவே மேனி சிலிர்த்தது. மூலாதாரத்திலிருந்து ஒரு மின்னல் கொடி மேலே எழுவதற்கு முயற்சித்தது. புருவத்தின் மத்தியில் அவ்வப்பொழுது “மினுக் மினுக்” என்று ஒரு ஜோதி தர்சனம் ஏற்பட்டது. அப்பொழுதெல்லாம் விவரிக்க முடியாத ஆனந்தத்தை அனுபவித்தேன். ஹ்ருதய ஆகாசத்தில், இந்திர நீலக்கல் போன்று வாஸுதேவன் தோன்ற ஆரம்பித்தான். அவர்கள் சொல்லக்கூடிய கிருஷ்ண கதையில் என் மனம் பித்துப் பிடித்துவிட்டது. இதனால், எந்த சாத்திரங்களையும் கற்காமலே, எனக்கு உள்ளங்கை நெல்லிக்கனி போல் தத்துவங்கள் தெளிவாக விளங்க ஆரம்பித்தன. அந்த

சாதுர்மாஸ்ய இரண்டு ருதுக்களிலும் (வர்ஷ - சரத்) மூன்று வேளைகளும், வாஸுதேவனின் புகழைக் கேட்டதால், என் மனதின் தமோ குணம், ரஜோகுணம் அடிபட்டு, சுத்த ஸாத்வீக பக்தி உண்டாயிற்று. சாதுர்மாஸ்யம் முடிந்து அவர்கள் கிளம்பும்பொழுது, அவர்களுடைய கிருபையினாலேயே எனக்கு எல்லா நற்குணங்களும் சித்தித்துவிட்டதால், ஆத்ம தத்வபரமான ஞானத்தை உபதேசம் செய்துவிட்டு புறப்பட்டார்கள். பகவான் வாஸுதேவனிடம் அர்ப்பணிக்கப்பட்ட கர்மா அனைத்து தாபங்களையும் போக்கக்கூடியது.

வியாதி எதனால் ஏற்பட்டதோ, அதுவே அந்த வியாதிக்கு மருந்து ஆகாது அல்லவா? அதுபோல் எந்தக் கர்மாவால் இந்த ஸம்ஸாரம் ஏற்பட்டதோ, அதுவே இந்த ஸம்ஸாரத்திற்கு மருந்து ஆகாது. ஆனால், அவைகளை வாஸுதேவனிடத்தில் அர்ப்பணம் செய்தால், நிவ்ருத்தி மார்க்கம் ஸித்திக்கும். பகவத் ப்ரீதிக்காக கர்மாக்களை செய்ய வேண்டும். பகவத் ப்ரீதிக்காக அவனுடைய கதைகளைக் கேட்டும், கீர்த்தனமும் செய்யவேண்டும்.

*நமோ பகவதே துப்யம் வாஸுதேவாய தீமஹி* ।
*ப்ரத்யும்னாய அநிருத்தாய நம: ஸங்கர்ஷணாய ச"* ॥ (1-5-37)

என்ற மந்திரத்தால், யக்ஞபுருஷனை பஜிக்கின்றவன் உண்மை ஞானத்தை அடைவான். நான் இவற்றையெல்லாம் அனுஷ்டித்ததால் ஸ்ரீவாஸுதேவன் ஞானத்தையும், அஷ்டமாஸித்திகளுடன் கூடிய ஐஸ்வர்யத்தையும், அவரிடம் பக்தியையும் எனக்குக் கொடுத்தார். ஆகவே, வியாஸ பகவானே! தாங்களும் ஸ்ரீ வாஸுதேவனுடைய கீர்த்தியை நன்றாக எடுத்துச் சொல்வீர்களாக! ஏனென்றால், துக்கப்படுகின்ற மனிதர்களின் துக்கமானது, வாஸுதேவனுடைய கதைகளைக் கேட்பதைத் தவிர, வேறு ஒன்றினாலும் போகவே போகாது.

### அத்யாயம் 6

இவ்வாறு சொல்லிவந்த ஸூதர், ஸௌனகாதி மஹரிஷிகளைப்

பார்த்து, நாரதர் சொன்ன விஷயங்களில் ஆர்வம் அடைந்து, வியாஸர் மேலும் நாரதரைப் பார்த்துப் பேசலானார் என்று தொடர்ந்தார்.

“மஹான்கள் அந்த ஊரை விட்டுக் கிளம்பிய பிறகு, என்ன நடந்தது? தாங்கள் என்ன செய்தீர்கள்? மேலும், அந்த சரீரத்தை எப்படி விட்டீர்கள்? முந்தின கல்பத்தில் நடந்த விஷயங்கள் இப்பொழுது நடந்தது போல், எப்படி உங்களுடைய ஞாபகத்தில் உள்ளது?'' என்றார் வியாஸர்.

நாரதர் தொடர்ந்து சொல்லலானார். “பாவம் என் தாய். போதிய ஞானம் இல்லை. குற்றேவல் செய்யக்கூடிய அவளுக்கு சுகம் ஏது? உலகத்தில் யாருமே சுதந்திரர்கள் இல்லை. எல்லோருமே ஈஸ்வரனுக்கு வசப்பட்டவர்களே. கர்மா எனும் கயிற்றைக் கொண்டு பொம்மலாட்டக்காரன் பொம்மைகளை ஆட்டுவிப்பது போல், ஜீவன்களை ஆட்டி வைக்கின்றார். என் தாய்க்கு, என் மீது உள்ள வாத்ஸல்யத்தை அனுஸரித்து, நானும் அவளுடனேயே தங்கியிருந்தேன். ஒருசமயம், அவள் வேலை செய்த வீட்டில் மாடு கன்று போட்டது. இரவே ஒருவர் வந்து என் தாயைப் பால் கறப்பதற்கு அழைத்தார். அப்பொழுது யமனால் தூண்டப்பட்டு ஒரு பாம்பு அந்தப் பாதையில் வர, நள்ளிரவு இருட்டில் யாரும் துணையில்லாத அவள் அதை இடர, அது கடித்து அங்கேயே மாண்டாள். வியாஸரே! “அப்பொழுது நான் என்ன நினைத்திருக்க வேண்டும்? இவ்வளவு நாட்கள் ஸாதுக்களுடன் இருந்தேனே ஏற்கனவே தந்தை இல்லாத குழந்தை. ஒரே ஆதரவாக இருந்த தாயும் இப்பொழுது இல்லையே, நான் அனாதையாகிவிட்டேனே,' என்றல்லவா நினைக்க வேண்டும். ஆனால் எனக்கு பந்தமாக இருந்த தாயும் இறைவன் திருவடியை அடைந்தார். நாம் இனி ஸ்வதந்திரமாக பகவானை தியானம் செய்யலாம் என்றே நினைத்தேன். மேலும் தன்னை ஆஸ்ரயிப்பவர்களுக்கு, பகவான் நன்மையே புரிவான் என்று எனக்கு தோன்றியது” என்று நாரதர் தொடர்ந்து பேசலானார்.


(கனியும்)

# பத்திரம் செய்த நாமம்! – நாமானுபவம்

–தனம்ராஜ்

ஹரே ராம ஹரே ராம ராம ராம ஹரே ஹரே
ஹரே க்ருஷ்ண ஹரே க்ருஷ்ண க்ருஷ்ண க்ருஷ்ண ஹரே ஹரே

“சுவாமிஜி பொற்பாதங்களுக்கு நமஸ்காரம். தாங்கள் பக்தியை எளிமையாக்கி விட்டீர்கள். பகவானுக்கு பிடித்தது நாம சங்கீர்த்தனம். இதை நீ எப்பொழுது வேண்டுமானாலும் எங்கு வேண்டுமானாலும் சொல்லிக் கொண்டே இரு. பணச் செலவா? இல்லை, உடல் உழைப்பை அதில் செலவழிக்கிறாயா?


சுவாமிஜி பொற்பாதங்களுக்கு
நமஸ்காரம். தாங்கள் பக்தியை எளிமையாக்கி
விட்டீர்கள் பகவானுக்கு பிடித்தது நாம சங்கீர்தனம்

இல்லையே? உனக்கு நாமா சொன்னால் மனச் சோர்வு நீங்கி விடும்” என்று சொல்லி உள்ளீர்கள்.

எனக்கு வயது 64. நான் தினமும் காலையில் நாமம் சொல்லுகிறேன். வேலையை ஆரம்பிக்கும் பொழுது சொல்கிறேன் இரவு படுக்க போகுமுன் சொல்கிறேன். இரவில் தூங்காமல் விழித்திருந்தாலும் சொல்கிறேன். இரவு 4மணிக்கு விழித்துவிட்டால், அப்பொழுது நாமாவை சொல்லிக் கொண்டே இருப்பேன். என் குடும்பத்தாரும் சொல்லிக் கொண்டே இருப்பார்கள். என் மனைவி விமலா இரவில் படுக்க போகும்பொழுது, தினம் ஒரு கதை சொல்வாள். ராமதாசர், “நாம கீர்த்தனத்தின் மகிமையை, ஸ்ரீராம பகவானை நேரில் பார்க்க வேண்டும் என்றால், எத்தனையோ கோடி நாமா சொன்னால் ஸ்ரீராமனை தரிசிக்கும் பாக்கியம் கிடைக்கும் என்று சொல்கிறார்” என்பாள். ராமதாசர் நாமம் சொல்லிக்கொண்டே இருப்பார்; “நீ தான் கணக்கு வைத்துக் கொள்ள வேண்டும்” என்று ராமதாசர் பகவானிடம் வேண்டிக் கொண்டாராம்.


இனிமேல் விஷயத்திற்கு வருவோம். நாங்கள் நடுத்தர குடும்பம். என் மனைவி, நான், என் பிள்ளைகள், நாமத்வார் வந்து, நாமம் சொல்லுவோம். என் மனைவி, வீட்டில் ஆறு மாதத்திற்கு ஒரு முறை நாமசங்கீர்த்தனம் கூட்டாக சொல்லி, ராம நாம மகிமை சொல்லி, ஒரு கதை சொல்வாள்.

நான் முப்பது வருடம் வேலை பார்த்து வந்தேன். இப்பொழுது பதினெட்டு வருடமாக, நானும் என் மகனும் ஆங்கில மருந்து கடை நடத்தி வருகிறோம். மஹாமந்திர கீர்த்தனம் செய்பவர்களை துன்பங்கள் அணுகாது என்று சொல்வதை நிரூபிப்பது போல், எங்கள் கடையில் ஒரு சம்பவம் நடந்தது. எங்கள் கடை முதலாளி, “கடையை விற்கப் போகிறேன். வாங்கியவருக்கு கடையை காலி பண்ணி கொடுக்க வேண்டும் என்ற விதிமுறையில், கடையை காலி பண்ணுங்கள்; அல்லது, கடையை நீங்கள் வாங்கி கொள்ளுங்கள்” என்றார். அதற்கு ஆறு லட்சம் தேவைப்பட்டது.

நடுத்தர குடும்பத்தை சேர்ந்த எனக்கு ஆறு லட்சம் மிகப் பெரிய தொகை; என்ன வந்தாலும் பரவாயில்லை என்று, நகைகளை பேங்கில் வைத்து அட்வான்ஸ் வைத்தாகிவிட்டது. கடைசியில் இரண்டு லட்சத்து இருபது ஆயிரம் புரட்ட முடியவில்லை. கவலையோடு நான் நாமா சொல்லிக் கொண்டே இருந்தேன். குடும்பம் முழுவதும் நாமா சொல்லிக் கொண்டே இருந்தோம். நான்கு பெட்ரோல் பங்க் வைத்திருக்கும் என் நண்பனிடம் கேட்டேன்; பணம் என்றால் பதுங்கி கொண்டார்கள். என் மனைவி விமலாவும், “கவலைப்படாதீர்கள். குருவின் ஆசிர்வாதம் நமக்கு உண்டு. நாம் சொல்லும் நாமா நமக்கு உதவி செய்யும்” என்றாள்.

நான் ஒருநாள் கடைக்கு வந்து ஏழு மணியளவில் கடையை திறந்தேன். அப்பொழுதுதான் அந்த அதிசயம் நடந்தது. அந்த பணக்கார நண்பர் நெஞ்சுவலி என்று வந்தார். “நான் அல்சர்தான் நெஞ்சுவலி என பயப்பட வேண்டாம்” என்று சொல்லி அவரை கூட்டிக் கொண்டு பத்து மணியளவில், நான் வேலை பார்த்த டாக்டரிடம்

அவரை அழைத்து சென்றேன். அவரும் தனம்(நான்) சொன்னால் சரியாகத்தான் இருக்கும் என்று கூறி, இ.ஸி.ஜி., ரத்த பரிசோதனை எல்லாம் செய்து பார்த்தார். பின்னர் “அல்சர் வலிதான். ஒன்றும் இல்லை” என்று கூறி, மாத்திரை எழுதி, அதை சாப்பிட்டால் போதும் என்று சொல்லிவிட்டார். அந்த பணக்கார நண்பரிடம் கடை விலைக்கு வருவதையும், 2 லட்சத்து 20 ஆயிரம் தேவையையும் சொன்னேன். உடனே அந்த நண்பர், “உன் முதலாளி எளிதில் எந்த சொத்தையும் விற்க மாட்டார். உடனே, உனக்கு நல்ல சந்தர்ப்பம். அந்த கடையை வாங்கு; வட்டி இல்லாமல் நான் பணம் தருகிறேன்”


நாமாவின் மகிமைக்கு என் குடும்பமே
நன்றியோடும் பக்தியோடும் இருக்கின்றோம்
நாங்கள் நாமாவின் கோடீஸ்வரர்கள்
A. தனம் ராஜ்
D. விமலா

என்றார். நான் அவர் ஆபிஸுக்கு வருகிறேன் என்றபொழுது, அவரே நேரடியாக என் கடைக்கு வந்து 2 லட்சத்தை கொடுத்து, பத்திரம் முடித்துவிடு என்றார். வைகாசி 23ஆம் தேதி அட்வான்ஸ் வைத்து வைகாசி பௌர்ணமி அன்று பத்திரம் பதிவு செய்தோம். என்ன அற்புதம்! ஏழு நாளில் பத்திரம் பதிவு செய்த மகிமை; நாம சங்கீர்த்தனத்தின் மகிமை அல்லவா! நன்றி. நான் சொல்லும் நாமாவின் மகிமையால் ஸ்ரீராம பிரானை அந்த பணக்கார நண்பர் மூலம் கண்டேன். ஆபத்து காலத்தில், மகாமந்திர கீர்த்தனம் உரக்கச் சொல்லுங்கள். கண்ணன் உங்களுக்கு உடனே உதவிகளை அனுப்பி வைப்பான். நாமாவின் மகிமைக்கு, என் குடும்பமே நன்றியோடும் பக்தியோடும் இருக்கின்றோம். நாங்கள் <u>நாமாவின் கோடீஸ்வரர்கள்</u>.

A.தனம் ராஜ், D .விமலா

அருண்விக்னேஷ், உமாவேல்விழி, மதுமிதா

அமராவதி மெடிகல்ஸ், 2 , கீழச்சண்முகபுரம் மெயின், தூத்துக்குடி

# குரு தரும் ஞானம்!

-பத்மபாதர்

சென்னையில் வசித்து வந்த ஒருவருக்கு மிகவும் அழகான வீடு கட்ட வேண்டும் என்று ஆசை. மொத்தத்தில் சொல்ல போனால் LIFETIME AMBITION என்று சொல்லுவார்களே, அதுபோல் ஒரு அருமையான வீடு கட்ட வேண்டும் என்பதுதான் அவருடைய LIFETIME AMBITION. நண்பர்கள், உறவினர்கள் போன்றவர்களுடைய வீட்டிற்கு செல்லும்பொழுதெல்லாம், அவருடைய கவனம் முழுவதும் அந்த வீட்டின் அமைப்பில்தான் இருக்கும். தெருவோடு செல்லும்பொழுதெல்லாம் கூட, இரு பக்கங்களிலும் உள்ள வீடுகளை கவனித்துக் கொண்டே செல்வார். இப்படித்தான் CINEMA DRAMA என்று டி.வியில் பார்த்தாலும் சரி, அதில் வரும் வீடுகளிலேயே அவருடைய கவனம் இருக்கும்.

இப்படியாக பார்த்து பார்த்து, மனதில் கற்பனையில் வளர்ந்து வந்த வீடு, நினைவில் வரும் காலமும் வந்தது. நல்ல மனையாக பார்த்து வாங்கினார். நல்ல நாளில் பூமி பூஜையும் போட்டார். வாஸ்து பார்க்கும் ஒருவருடன் கலந்து, அழகான பிளான் போட்டார். அருமையான வீடும் உருவாகி கிருஹபிரவேசமும் நல்லபடியாக நடந்து முடிந்தது. சந்தோஷமாக அந்த வீட்டில் வசித்து வந்தார். அவர் வேலை பார்த்து வந்த அலுவலகத்தில் திடும் என்று RECESSION காரணமாக அலுவலகத்தையே மூடி விட முடிவு செய்தார்கள். அதன்படி இவர் புதுடில்லிக்கு மாற்றப்பட்டார்.

> *"இது என்னுடையது" என்ற பிடிப்பு, தனக்கு மிக அருகில் இருக்கும் நம் சரீரத்தைத்தான், முதன் முதலில் பிடிக்கின்றது. அதனால்தான் சரீரத்தில் ஏற்படும் சுகமும் துக்கமும், நம்மை வெகுவாக பாதிக்கின்றது.*

புதுடில்லிக்கு போய்த்தான் ஆக வேண்டுமா? என்று யோசித்தால், இது போல், நல்ல வேலை, நல்ல சம்பளம் சென்னையில் கிடைக்காது. இதை விட்டு விட்டு, வேறு வேலை

தேடலாம் என்றாலோ, இந்த வயதிற்கு மேல் வேறு வேலை கிடைத்து வீடு கட்டுவதற்காக வாங்கிய கடனுக்கு மாதம் E.M.I.(வங்கி கடன்) கட்ட வேண்டும். வேறு வழியில்லாமல், தான் ஆசையாக கட்டிய வீட்டை காலிசெய்து விட்டு, புதுடில்லி செல்ல முடிவு எடுத்தார்.

வீட்டை வாடகைக்கு விட்டால் பாழ் செய்து விடுவார்களோ என்று கவலை ஒரு புறம்; சும்மா பூட்டி இருப்பதை விட வாடகைக்கு விட்டால் வரும் வாடகை கட்டும் (வங்கி கடன்) E.M.I.க்கு உதவியாக இருக்குமே என்று ஒருபுறம் நப்பாசை.

எப்படியோ நல்ல குடும்பமாக பார்த்து, குடி வைத்து விட்டு புதுடில்லி கிளம்பி சென்று விட்டார். அங்கு சென்றாலும் தான் கட்டிய அருமையான வீட்டை பற்றியே நினைத்து கொண்டிருப்பார். ஒருநாள் REVERSE எடுக்க முயன்ற LORRY DRIVER வீட்டின் COMPOUNDஐ தட்டி விட்டான் என்ற செய்தியை கேள்விபட்டவுடன், அவருக்கு அழுகையே வந்து விட்டது. அதுபோல், அந்த வீட்டை பார்க்கும் சிலர் அது மிகவும் அழகாக உள்ளது என்பதை TELEPHONE இல் சொல்ல கேட்டால் அவருக்கு மகிழ்ச்சி தாங்காது.

இப்படியாக அவர் டில்லியில் வேலை பார்த்து கொண்டிருக்கையில் அவருக்கு ஒரு NOTICE (நோட்டீஸ்) வந்தது. என்ன அது? கிருஷ்ணா வாட்டர் சென்னைக்கு வருகின்றது அல்லவா? அவருடைய வீட்டின் வழியாகத்தான் அந்த கால்வாய் (CANAL) வருகின்றது. அதனால் அந்த பகுதியை அரசாங்கம் எடுத்து கொண்டு அதற்கு தகுந்த COMPENSATION (ஈடு) தரப்படும் என்று அதில் எழுதி இருந்தது.

அந்த (நோட்டீஸ்) NOTICE இல் உள்ள விஷயத்தை படித்து பார்த்தவுடன், அவருக்கு ஹிருதயமே நின்று விடும் போல் ஆகி விட்டது. உடல் வியர்க்க ஆரம்பித்தது. உடல் துடிதுடித்தது. ஒரு PANIC DISORDER (பேனிக் டிஸார்டர்) ஏற்பட்டது. அவரை உடனே மருத்துவமனைக்கு தூக்கிச் சென்றார்கள்.

இது ஒருபுறம் இருக்கட்டும். சென்னைக்கும் புதுடில்லிக்கும்

எவ்வளவு கிலோமீட்டர்கள்? இங்கிருந்தபடியே, அந்த வீடு எப்படி அவரை பந்தபடுத்தியது? அந்த வீட்டை புகழ்ந்தால் சுகமும் அந்த வீட்டிற்கு ஆபத்து வந்தால் எப்படி துக்கமும் அடைந்தார்! “இந்த வீடு அவருடைய மனதில் வசித்து இருந்தது; அதனால்தான்” என்று நீங்கள் பதில் சொல்வது என் மனதில் கேட்கின்றது. அப்படியாக இருக்க முடியாது. ஏன் என்றால், அவர் இதுவரை பார்த்து பழகிய உறவினர்களுடைய வீடு, நண்பர்களுடைய வீடு, அலுவலகம் எல்லாம் எப்படி இருக்கும் என்றால், அவைகளை அழகாக வர்ணித்து கூறி விட்டு, ஏன் படமே போட்டு காட்டி விடுவார். அவைகள் கூடத்தான் அவருடைய மனதில் இருந்தது. ஆனால் அந்த வீடுகளினுடைய வளர்ச்சியோ, இடிபாடுகளோ இவரை பாதிக்கவில்லையே? இந்த வீடு மட்டும் பாதித்தற்கு என்ன காரணம்?

இந்த வீடு என்னுடையது என்று இவருடைய உடலில் ஏதோ ஒரு இடத்தில் இருந்து கிளம்பிய சக்தி வந்து, அந்த வீட்டை கொக்கி போட்டு வளைத்து பிடித்துள்ளது. அதுதான், “இது என்னுடையது” என்ற கிளட்ச் (CLUTCH) பிடிப்பு; அதற்கு தூரமும் பொருட்டல்ல; என்ன பொருள் எது எப்படிப்பட்டது என்பதும் பொருட்டல்ல; நம் உடலில் கண்களுக்கு தெரியாத ஒரு இடத்திலிருந்து கிளம்பும் ராட்சஸ கிளட்ச் (CLUTCH) பிடிப்பு, எதையெல்லாம் பிடிக்கின்றதோ அது எல்லாம் நம்மை படாத பாடுபடுத்தும். அந்த ராட்சஸ (CLUTCH) பிடிப்பு, வெகுதூரத்தில் இருக்கும் பொருளைத்தான் பிடிக்கும் என்று நினைக்க வேண்டாம். முதன்முதலில் தனக்கு மிக அருகில் இருக்கும் நம் சரீரத்தைத்தான், அது முதன் முதலில் பிடிக்கின்றது. அதனால்தான் சரீரத்தில் ஏற்படும் சுகமும் துக்கமும், நம்மை வெகுவாக பாதிக்கின்றது.

இந்த கிளட்சை(பிடிப்பை) ஜாக்கிரதையாக கழற்றி விட கற்றுத் தருபவருக்கும், உதவி செய்பவருக்கும்தான் குரு என்று பெயர். அந்த நான், எனது என்ற இரண்டு கிளட்ச் (CLUTCH)களும் அவிழ்க்கப்படாமல், நாம் சாதனைகளில் எவ்வளவு முன்னேறினாலும் அவைகள் எல்லாம் ஒரு பிரமிப்பே!

## சனாதனப் புதிர் - பகுதி - 31

( விடைகள் அடுத்த இதழில்)
–ஆத்ரேயன்

1. சதருத்ரீயம் என்று எதை சொல்லுகிறார்கள்?

2. கௌரவ சைன்யத்தை ஸ்ரீபரமேஸ்வரன் தனது சூலத்தால் வதம் செய்தார் என்று மஹாபாரதத்தில் கூறப்பட்டுள்ளது. இதை எங்கே காணலாம்?

3. சம்பாதித்த பொருளுக்கும் பணத்திற்கும் நான்கு சகோதரர்கள். அவர்கள் யார்?

4. ஆசையை மூன்று விதமாக சொல்லுகிறார்கள்? அவைகள் யாவை?

5. அபரோஷானுபூதி - இது யாரால் செய்யப்பட்டது? எத்தனை ஸ்லோகங்கள்? இது எதை பற்றியது?

OUR HUMBLE PRANAMS TO SRI SWAMIJI

WE HANDLE ALL TRAVEL RELATED SERVICES


1. DOMESTIC INTERNATIONAL AIR TICKETING
2. VISAS / PASSPORT
3. INSURANCE
4. FOREIGN EXCHANGE
5. HOTEL RESERVATION & RENT A CAR SERVICES
6. OUTBOUND & INBOUND TOUR PACKAGE

PL CONTACT

EURO WORLD TRAVEL PVT. LTD

26, FIRST FLOOR, C.P.RAMASWAMY ROAD, ALWARPET,
CHENNAI - 600018. Ph - 9382846979 Ph- 24661228/29, 24671228/29,
24993609/4629 Email - eurotravel@vsnl.net/euroworldtravel@gmail.com

**Our Humble Pranams to the Lotus feet of His Holiness Sri Sri Muralidhara Swamiji**



**Gururam Consulting Private Limited**

# பாலகர்களுக்கு ஒரு கதை



## நாமம் சொல்லுவோம் குழந்தைகளே

ஐந்து நபர்கள் சேர்ந்து பிரவசனம் கேட்க போனார்கள். அன்று பிரவசனம் செய்தவர் ஒரு மஹான். "இந்த கலியில் மஹாமந்திர கீர்த்தனம் ஒன்றே போதும். இதை இடைவிடாமல் கீர்த்தனம் செய்து வந்தாலே, இந்த சாரமற்ற ஸம்ஸாரத்தை தாண்டிவிடலாம்" என்று அவர் கூறியதை கேட்டார்கள்.

இந்த ஐந்து நபர்களும் பிரவசனம் முடிந்து திரும்பும் பொழுது, அவர் கூறியபடியே எப்பொழுதும் மஹாமந்திர கீர்த்தனம் செய்ய ஆசைப்பட்டார்கள்.

"சரி நாம் மஹாமந்திர கீர்த்தனம் செய்வதற்கு இடம் வேண்டுமே? என்ன செய்வது" என்று ஒருவர் தெரிவிக்கையில், ஐவரில் ஒருவர் சொன்னார்; "அதற்கான இடத்தை நான் வாங்கி கொடுத்து விடுகின்றேன்" என்று. இரண்டாமவர் சொன்னார், "அவர் இடம் வாங்கி தருவதாக இருந்தால் நான் என்னுடைய செலவில் கட்டிடம் கட்டி தந்து விடுகின்றேன்" என்றார். மூன்றாமவர், "நான் ஒரு போர்வெல்(borewell) போட்டு கொடுத்து, தண்ணீர் தடையில்லாமல் கிடைக்கும்படி செய்து விடுகின்றேன்" என்றார். நான்காம் நபரோ, "அப்படி கீர்த்தனம் நடக்கும் இடத்தில், ஒரு ராதா க்ருஷ்ண மூர்த்தி இருந்தால் அழகாக இருக்கும்; அதை நான் செய்து விடுகின்றேன்" என்றார். ஐந்தாமவர், "அப்படி நாம கீர்த்தனம் செய்பவர்களின் உணவுக்கு நான் ஏற்பாடு செய்து விடுகின்றேன்" என்றார்.

இவர்கள் சொன்னபடியே எல்லாம் செய்தாகிவிட்டது. ஆனால் அந்த ஐவரில், ஒருவர் கூட நாம கீர்த்தனம் செய்ய உட்காரவில்லை. அதோடு மட்டும் அல்லாமல், நாங்கள் இவ்வளவு வசதி செய்து தந்தாலும் கூட, நாமகீர்த்தனம் செய்வதற்கு யாரும் வருவதில்லை என்று குறைபட்டு கொண்டு,

எல்லோரிடமும் சொல்லி கொண்டிருந்தார்கள்.

நாம கீர்த்தனம் ஸுலபமான வழி; ஆனால் உன்னுடைய மாயை அதைக்கூட செய்ய விடாது. குழந்தைகளே! மாயைக்கு வசப்படாமல், வேறு எதிலும், ஆடம்பரம், ஆர்ப்பாட்டம் போன்றவற்றில் கவனம் செலுத்தாமல் கீர்த்தனம் ஒன்றையே பற்றி இருங்கள்.

நாம் இருக்கும் இடத்தை சுத்தமாக வைத்து கொள்ளவேண்டும். நாம் உண்ணும் உணவு சுத்தமாக இருக்கவேண்டும். நாம் உடுக்கின்ற உடைகள் சுத்தமாக இருக்கவேண்டும். நாம் நம் உடலை சுத்தமாக வைத்து கொள்ள வேண்டும். இவ்வளவு இருந்தும் மனது சுத்தமாக இல்லை என்றால் ஒரு பலனும் இல்லை. மனது சுத்தமாக க்ருஷ்ண கீர்த்தனம் ஒன்றே வழி.

–மஹாரண்யம் ஸ்ரீமுரளீதர ஸ்வாமிஜி

ஒரு கோவிலில் தெய்வ ஸாந்நித்யம் ஏற்பட பூஜை, ஹோமம், அர்ச்சனை எல்லாவற்றை காட்டிலும் அதை கட்டும்பொழுதே, பகவானுக்கு என்று ஆசை ஆசையாக கட்டினாலே போதும். தெய்வத்தின் ஸாந்நித்யம் ஏற்பட்டுவிடும்.

–மஹாரண்யம் ஸ்ரீமுரளீதர ஸ்வாமிஜி

# புனித கன்யா மாத விரதம்

- ஸ்ரீ பம்மல் பாலாஜி



ஸ்ரீநிவாஸ பகவான் கலியுகத்தில் தன்னை வெளிப்படுத்திக் கொண்ட புகழையுடையது புனிதமான புரட்டாசி என்கிற கன்யா மாதம். உலகெங்கும் உள்ள பக்தர்கள் அன்புடன் இம்மாதத்தை ஸ்ரீநீவாஸ பகவானுக்காக அர்ப்பணிக்கின்றனர்.

நம் ஸத்குருநாதரின் அருளாணையை முன்னிட்டு, கடந்த ஒன்பது ஆண்டுகளாக, எல்லா மங்களங்களையும் அருளும் வரப்ரஸாதியான நமது மஹாரண்யம் ஸ்ரீ கல்யாண ஸ்ரீநிவாஸ பெருமாள் ஸந்நதியில், கன்யா மாத விரதம் கடைப்பிடிக்கப்படுகிறது.

வேண்டுவோர் வேண்டும் வரமெல்லாம் அருளும் இந்த விரதத்தால் மக்கட்பேறு அடைந்தவர்கள், திருமணமானவர்கள், உடல் உபாதைகள் தீர்ந்தவர்கள், வெளிநாட்டு வேலை வாய்ப்பை அடைந்தவர்கள், கடன் தொல்லை தீர்ந்தவர்கள், தொழில்வளம் கண்டவர்கள் என ஏராளமான அன்பர்கள் தமது நன்றிகளை பெருமாளுக்கு தெரிவிப்பதை காணும்பொழுது மகிழ்ச்சியாக உள்ளது.

கடந்த ஆண்டு நடந்த விரத பூர்த்தி விழாவை கண்ட அன்பர்கள் பலர் நேரிலும், கடிதம் மூலமும் தொடர்பு கொண்டு இந்த

விரத விதிமுறைகளைப் பற்றி கேட்டு வருவதால் அவர்கள் அனைவரும் பலனடைய விதிமுறைகள் கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

புரட்டாசி மாதம் முதல் தேதியன்று காலை நீராடி தூய்மையாக பெருமாள் கோவிலிலோ, பஜனை மண்டபத்திலோ, அல்லது தங்கள் வீட்டிலோ துளசி மாலை அணிந்து கொள்ளவேண்டும்.

ஆண் பெண் இருபாலாரும் மாலை அணிந்து கொள்ளலாம்

இரு வேளை புனித நீராடி, மஞ்சள் ஆடை அணிந்து, நெற்றியில் திருமண்காப்போ அல்லது கோபி சந்தனமோ அணிந்து கொள்ளவேண்டும்

இரு வேளையும் 108 முறையாவது ஹரே ராம மஹாமந்திரத்தை வாய்விட்டு சொல்லவேண்டும்

புலால் உணவை தவிர்த்து புலனடக்கத்துடன் இருக்க வேண்டும்.

கூடியவரையில் படுக்கையை உபயோகிப்பதை தவிர்க்கவும்

அனைவரிடமும் அன்புடன் பழக முயற்சிக்கவும்

கூடியவரை இறை சிந்தனையுடன் இருக்க வேண்டும்

புரட்டாசி கடைசி சனிக்கிழமையன்று, நமது மஹாரண்யம் ஸ்ரீ கல்யாண ஸ்ரீநிவாஸ பெருமாள் ஸந்நிதிக்கு குடும்பத்துடன் வந்து அன்னகூட வைபவத்திலும், அகண்ட தீப வழிபாட்டிலும் கலந்து கொண்டு விரதத்தை பூர்த்தி செய்ய வேண்டும்.

<u>விரதம் துவங்க வேண்டிய நாள்:</u>

புரட்டாசி 1ஆம் தேதி ஞாயிறு (18/9/2011)

<u>விரதம் பூர்த்தியாகும் நாள்:</u>

புரட்டாசி 28ஆம் தேதி சனிக்கிழமை (15/10/2011).

## சனாதனப் புதிர் : பகுதி – 30 விடைகள் –ஆத்ரேயன்

1. உண்மை பேசுதல், ஈதல், சோம்பல் இல்லாமை, பொறாமை இல்லாமை, தைரியம்.

2. அறிவு, நற்குடிப்பிறப்பு, அடக்கம், கல்வி, பராக்கிரமம், மிதமான வார்த்தை, சக்திக்கு தக்கபடி ஞானம், செய்நன்றி அறிதல்.

3. மதங்கொண்டவன், அஜாக்கிரதையுடையவன், பித்தன், களைப்படைந்தவன், கோபத்தை அடைந்தவன், பசித்தவன், அவசரக்காரன், லோபி, பயந்தவன், காமி - ஆகிய பத்து பேர்.

4. ‘மம’ என்னுடையது - மரணத்தின் வழி; ‘ந மம’ என்னுடையது அல்ல - பிரம்மத்தின் வழி.

5. விளையாட்டுக்காகவும், ஸ்திரீகளிடத்தும், விவாஹ காலத்திலும், பிராணாபாய காலத்திலும், எல்லாச்சொத்துக்களும் பறிக்கப்படும் காலத்திலும் சொல்லப்படும் பொய் தீங்கு செய்யாது.

SRI HARI:

PRANAMS TO THE LOTUS FEET OF HIS HOLINESS SRI SRI MURALIDHARA SWAMIJI

Buddies
Infotech Pvt Ltd

OUR SOLUTIONS

- WEB DEVELOPMENT
- SOFTWARE DEVELOPMENT
- WEB MARKETING
- MOBILE SOLUTIONS

Buddies Infotech Pvt Ltd
KG Marina Bay,No.75 & 77, Ground Floor,
Santhome High Road,Santhome,
Chennai 600 004
Phone: +91-44-43033313
E-mail: contact@buddiesinfotech.com

## *சென்ற மாத நிகழ்ச்சிகள்*

**ஆகஸ்டு 2ஆம் தேதி**யன்று ஆடிப்பூரத்தை முன்னிட்டு சென்னை அண்ணாநகர் திரு.பலராமன் அவர்கள் இல்லத்தில் நடைபெற்ற **ஆண்டாள் கல்யாண வைபவத்தில்** ஸ்ரீஸ்வாமிஜி அவர்கள் கலந்து கொண்டார்கள். ஜூலை மற்றும் ஆகஸ்டு மாதத்தில் பல பக்தர்களின் இல்லங்களில் நடந்த நாமகீர்த்தன மற்றும் ஆண்டாள் கல்யாண வைபவங்களில் ஸ்ரீஸ்வாமிஜி கலந்து கொண்டார்கள்.

**ஆகஸ்டு 7ஆம் தேதி**யன்று **நங்கநல்லூரில் ஸ்ரீகுரு விட்டல் ஸேவா ட்ரஸ்ட** சார்பில் நடைபெற்ற பஜன் மேளாவில் கலந்து கொண்டு ஸ்ரீஸ்வாமிஜி அருளுரை வழங்கினார்கள்.

**ஆகஸ்டு 21 முதல் 30 வரை ப்ரேமிகவரதனின் பதினெட்டாவது ப்ரும்மோத்ஸவம்** மிக சிறப்பாக மதுரபுரி ஆஸ்ரமத்தில் ஸ்ரீஸ்வாமிஜி முன்னிலையில் நடைபெற்றது. மிகவும் திரளான அன்பர்கள் கலந்து கொண்டு குருவருளும் திருவருளும் பெற்று சென்றனர்.

**மஹாரண்யம் கல்யாண ஸ்ரீனிவாசபெருமாள் கோவிலில்** ஆடி மாதம் கடைசி வெள்ளிக்கிழமை **ஆகஸ்டு 12** அன்று, சுற்றி உள்ள கிராம மக்கள் கலந்து கொள்ளும், பிரதி வருடம் நடைபெறும் விளக்கு பூஜை மிக சிறப்பாக நடைபெற்றது. பிரதிமாதம் மஹாரண்யம் சுற்றி உள்ள கிராம அன்பர்கள் நடத்தும் மஹாமந்திர கூட்டுபிரார்த்தனை, **ஆகஸ்டு 7** அன்று, **மணிமங்கலம் வைகுண்ட பெருமாள்** ஸன்னதியில் நடைபெற்றது.

**ஜூலை 31 மற்றும் ஆகஸ்டு 14,15,16 தேதிகளில்** குளோபல் ஆர்கனைசேஷன் ஃபார் டிவினிடி இந்தியா டிரஸ்ட் அன்பர்கள் **வளசரவாக்கம், ஆதம்பாக்கம், குரோம்பேட்டை, நங்கநல்லூர்** ஆகிய இடங்களில் பல இல்லங்களில் மஹாமந்திர நாமகீர்த்தனம் செய்தனர். உடுமலைப்பேட்டை நாம அன்பர்கள் **ஆகஸ்டு 2ஆம் தேதி**யன்று ஆடிப்பூரத்தை முன்னிட்டு அகண்ட மஹாமந்திர கீர்த்தனம் செய்தனர். வந்திருந்தோருக்கு அன்னதானமும் செய்யப்பட்டது. **ஆகஸ்டு 6ஆம் தேதி**யன்று **செங்கத்திலும், ஆகஸ்டு 7ஆம் தேதி**யன்று **விக்கிரவாண்டி ஆஞ்சநேயர் கோவிலிலும்** மற்றும் **நெய்வேலி சங்கராஹாலிலும்** மஹாமந்திர கூட்டு பிரார்த்தனை நடைபெற்றது. இதில் ராமானுஜம்ஜி, கேசவன்ஜி, ராமச்சந்திரன்ஜி மற்றும் வசந்த்ஜி,

குரோம்பேட் முரளிஜி ஆகியோர் கலந்து கொண்டு உரையாற்றினார்கள். கோகுலாஷ்டமி உற்சவம் அனைத்து நாமத்வார் மையங்களிலும் மிக சிறப்பாக கொண்டாடப்பட்டது. **ஆகஸ்ட் 20 அன்று** ஸ்ரீபரத்கணபதி அவர்களால் நெதர்லாந்து நாட்டில் ஒரு சுப்ரமண்யர் கோவிலில் மஹாமந்திர சத்சங்கம் நடத்தப்பட்டது.

**ஜுலை 10, 2011 –** நாங்கூர் திவ்யதேசங்களில் ஒன்றான **குடமாடும் கூத்தர் (அரிமேய விண்ணகரம்) பெருமாளின் திருப்பணி** ஸ்ரீஸ்வாமிஜி அவர்களின் பெருமுயற்சியால் 1998இல் ஏற்கனவே செய்து முடிக்கப்பட்டது. ஆகம விதிகளின்படி, இக்கோவிலின் பாலாலயம் ஸ்ரீஸ்வாமிஜி அவர்களின் வழிகாட்டுதலின்படி **ஜுலை 10ஆம் தேதி**யன்று நடைபெற்று திருப்பணிகள் துவங்கின.

rb rajmani builders

launches its new project

"rajmani's mathura"

at kolapakkam (near Porur)

well designed and ventilated 2/3 bhk homes
(825 sq. ft to 1075 sq. ft) at fair prices

ph: 98400 30711 email: rajmanibuilders@gmail.com

website: www.rajmanibuilders.com

# ப்ருந்தாவனமும் நந்தகுமாரனும்

- ஜனனி

## தன்வந்தீ பாயி - 6

பாயிஜியின் குழுவினர், கிராமவாஸிகளுடன் சேர்ந்து கீர்த்தனம் செய்துவிட்டு கிரிராஜனின் அடிவாரத்திற்கு சென்று அவனுக்கு அழைப்பு விடுத்து விட்டு, எல்லோரும் சேர்ந்து வீடு திரும்பிக் கொண்டிருந்தார்கள். அச்சமயம் பாயிஜி, "கிரிராஜனை தரிசிக்க இது நல்ல வாய்ப்பு. ஆனால் கிரிராஜன் ஹோலி விளையாட வருவானா என்ன!!" என்று கூறினார்.

சிறிது நேரத்திற்கெல்லாம் எல்லோரும் பரிக்ரமா செல்லும் வழியில் சிறிது தூரம் சென்று விட்டார்கள். சிறிது தூரம் சென்ற பின் பாயிஜி ஒரு பாலகனை கண்டார். அவன் ஏழு-எட்டு வயது பாலகன். தலையில் மயில்பீலியும் இடுப்பில் பீதாம்பரமும் உயரிய ஆபரணங்களும் அணிந்திருந்த அவன், கையில் ஒரு தடியை வைத்துக் கொண்டு எதிர்திசையில் போய்க் கொண்டிருந்தான். அவனுடைய பளபளக்கும் ஜரிகை வஸ்திரமும் அவன் அணிந்திருந்த விலை உயர்ந்த வைரம் மற்றும் முத்து நகைகள் கண்ணை கூசச் செய்தன. பாயிஜி, "பாருங்கள்!! இந்த சிறுவன் யாருடைய குழந்தை? இவ்வளவு விலை மதிப்புள்ள நகைகளை தரித்துக் கொண்டு தனியாக செல்கிறானே! யாரேனும் இவனுக்கு ஏதேனும் தீங்கு செய்துவிட போகிறார்கள்" என்றார்.

உடனிருந்தவர்களோ, "எங்கே? எங்களுக்கு யாரும் தெரியவில்லையே" என்றனர். அட! இப்பொழுது தான் நம்மைத் தாண்டி எதிர் திசையில் அவன் சென்றானே! என்று கூறிய பாயிஜி, அவனுடைய வேஷ பூஷணங்களை வர்ணித்தார்.

கோவர்த்தனத்தை அடைந்த பொழுது பாயிஜி அங்குள்ள கிரிராஜனை கண்டு ஆச்சரியத்தில் அதிர்ந்து விட்டார். அவர் மேனியில் கம்பமும் (நடுக்கமும்) கண்களிலிருந்து கண்ணீர் பெருக்கமும் ஏற்பட்டன. ஏனென்றால், கிரிராஜன் அவர் வழியில் பார்த்த பாலகனின் அதே வேஷ பூஷணங்களை தரித்திருந்தான். அப்பொழுது அவர்,

கிரிராஜன் சுற்றி வருவதையும் பக்தர்களின் அழைப்பை ஏற்று ஹோலி விளையாடவும் அவன் வருவான் என்பதையும் புரிந்து கொண்டார். பாலக வடிவில் கிரிராஜனின் அந்த உருவம் அவர் ஹ்ருதயத்தில் பதிந்து விட்டது.

அன்று இரவு பாயிஜி கோவர்த்தனத்திலேயே தங்கினார். அடுத்த நாள் பர்ஸானா சென்றார். இரண்டு மூன்று நாட்கள் அங்கே தங்கி வண்ணமயமான ஹோலியை பார்த்து விட்டு ப்ருந்தாவனம் திரும்பினார். இதற்கிடையில், அவர் கண்ணெதிரே, எப்பொழுதும் கிரிராஜனின் உருவம் தெரிந்து கொண்டேயிருந்தது. எதையோ தொலைத்தாற்போல் தென்பட்ட அவரின் கண்கள், எப்பொழுதும் கண்ணீரால் ஈரமாகவே இருந்தன.

அவர் ப்ருந்தாவனம் திரும்பிய தினத்தன்று கௌராங்கதாஸ் பாபாவின் உபந்யாஸம் விராமத்திற்கு பின் தொடங்கவிருந்தது. பாபா கதை ஆரம்பிக்கும் முன்னரே ஸுக பவன் வந்துவிட்டார். ப்ரேம மாதுரீ பாயிஜியை பார்த்து, அவர் எங்கே எங்கே எல்லாம் தரிசனம் செய்தீர்கள் என்று கேட்டார்.

பாயிஜி ராதாகுண்ட, பர்ஸானா மற்றும் கோவர்த்தனத்தின் தரிசனத்தைப் பற்றி கூறினார். அப்பொழுது பாபா, “ பரிக்ரமா வழியில் கிரிராஜனின் தரிசனத்தைப் பற்றி நீ கூறவில்லையே?” என்றார். பாபாவின் முககமலத்திலிருந்து இதைக் கேட்ட மாத்திரத்தில், பாயிஜியின் தைரியம் உடைந்து விட்டது. அவர் கண்களிலிருந்து.கண்ணீர் மடை திறந்த வெள்ளம் போல் பெருகிற்று. இவ்வளவு நாளும் அடக்கி வைத்திருந்த உணர்ச்சிகளெல்லாம் பொங்கின. பாபாவின் சரணங்களில் வீழ்ந்து பாயிஜி குலுங்கி குலுங்கி அழத் தொடங்கினார். பாபாவின் கண்களிலிருந்தும் கண்ணீர் பெருகியது. அவர் பாயிஜியின் தலை மீது கை வைத்தபடி, “மகளே! நீ தன்யம் ஆனாய்” என்றார்.

சிறிது நேரம் சென்ற பின், பாயிஜி ஸமாதானம் அடைந்தார்.

(தொடரும்)

## *மாலே மணிவண்ணா – 99*

–மகாவித்துவான் மயிலம். வே. சிவசுப்பிரமணியன்

எல்லாவற்றோடும் கலந்து, மறைந்தும் நிறைந்தும் உள்ள எம்பெருமானே, எல்லாமாக இருக்கிறான். பகவத் கீதை 11ஆம் அத்தியாயத்தில், விசுவரூப தரிசனத்தில் எம்பெருமானே எல்லாமாக இருக்கும் காட்சி நன்கு விளக்கப்படுகிறது.

இறைமைத் தன்மை என்பது எல்லாமாக இருப்பதே. எவற்றிலிருந்தும் பிரிந்து இறைமைத் தன்மை இருப்பதில்லை. எல்லாவற்றிலும் ஊடுருவி அவ்வப்பொருள் தன்மைக்குச் சிறிதும் கேடின்றி, தன் தனித் தன்மையோடு நுட்பமாக நிற்பதே இறைமைக் குணமாகும். தக்க பருவத்தே இவ்விறைமை தன் முழுச் சொரூபத்தோடு வெளிப்படத் தவறுவது இல்லை.

நரசிங்க பெருமான் மறைந்திருந்து தூணில் வெளிப்படுவதற்கு முன் அப்பெருமான் அங்கிருக்கிறார் என்பது அறிந்தார் யார்? நம்புவார் யார்? ஆனாலும் பெருமான் அங்கே தான் இருந்திருக்கிறார். தேவைப்பட்டபோது தக்க பக்குவ காலம் வந்துற்றபோது, தன்னடியாரைக் காத்தருள வெளிப்படத் தவறுவது இல்லை.

விறகில் உள்ள நெருப்பு விறகுக்கு எதிரியானது. விறகை அழிக்கும் ஆற்றல் உடையது; ஆயினும், தன் ஆற்றலை அடக்கிக் கொண்டு விறகைப் போலவே அடங்கியிருக்கிறது. தக்க நேரத்தில் வெளிவந்து விறகை எரித்து இல்லாமல் சாம்பலாக்கி விடுகிறது.

பேரறிவாகிய ஞானப் பெரும்பொருள் எல்லாவற்றிலும், அவையே தானாய், மறைந்து நிறைந்து நிற்பதும் இது போன்றதே. எனவே, எல்லாமாகவும் அல்லவாகவும் இருப்பவன் எம்பெருமான் என்பதையே, "மூலப்பகுதியும் அநாதியான கால தத்துவமும், ஆகாயமும், காற்றோடு நெருப்பும் கூடிய இம்மூவேழ் உலகத்து

உயிர்கள் எல்லாம் நின்னிடத்துள்ளவாயின" என்றது பரிபாடல்.

உலகிற்கும் எம்பெருமானுக்கும் உள்ள சம்பந்தம் தாய்க்கும் குழந்தைக்கும் உள்ள சம்பந்தம் போன்றது.

*உலகு தன்னை நீ படைத்தி உள் ஒடுக்கி வைத்தி, மீண்டு*
*உலகு தன்னுளே பிறத்தி ஓரிடத்தை அல்லையால்*
*உலகு நின்னோடு ஒன்றி நிற்க வேறு நிற்றி, ஆதலால்*
*உலகில் நின்னை உள்ள சூழல் யாவர் உள்ள வல்லரே* (திருச்சந்த விருத்தம்.12)

உலகிற்கும் எம்பெருமானுக்கும் உள்ள சம்பந்தத்தை உள்ள வல்லவர் யார்? என்றார் திருமழிசைப்பிரான்.

தன்னிற் பிரிவிலா உயிர்களையும் உலகையும் காப்பது காரணமாக தன்னிறைவில் ஆனந்தமயமாக இருக்கின்ற பெருமான் தன்னையே பலவேறு வகையாகப் பகுத்துக் கொள்கிறான் என்பதை அடுத்துச் சொல்ல வருகிறது பரிபாடல்.

*தன்னுரு உறமும் பாற்கடல் நாப்பண்*
*மின் அவிர் சுடர்மணி ஆயிரம் விரித்த*
*கவை நா அருந்தலைக் காண்பின் சேக்கைத்*
*துளவம் சூடிய அறிதுயிலோனும்*
*மறம் மிகு மலிஒலி மாறரு தானையால்,*
*திறன் இகந்து வரூஉம் அவர் உயிர் அகற்றும்*
*விறல் மிகு வலிஒலி பொலிபு அகழ் புழுதியின்*
*திறன் உழும் வளைவாய் நாஞ்சிலோனும்*
*நானிலம் துளக்கற முழுமுதல் நாற்றிய*
*பொலம் புனை இதழ் அணி மணி மடற் பேர் அணி*
*இலங்கு ஒளி மருப்பின் களிறும் - ஆகி*
*மூ உரு ஆகிய தலை பிரி ஒருவனை!*

(தொடரும்)

## அப்பாலுக்கு அப்பால் அல்லமபிரபு -6

முக்தாயக்கா அஜகண்ணரின் சடலத்தை பார்த்து “அண்ணா உன் மூலம் தான் நான் உலகை பார்த்து வந்தேன். நீ மறைந்ததால் என் கண்கள் கட்டப்பட்டது போல் ஆனது. சக்கரத்தையும் அச்சையும் இணைக்கும் ஆணி பிரிந்தால் வண்டிக்கு என்ன ஆகுமோ, அது போல் எனது வாழ்க்கை நீ இன்றி ஆட்டம் கண்டது. உனக்கு மரணம் என்ற துன்பம் எப்படி வந்தது (அதை நீர் வென்றவர். அது எப்படி உன்னை மறுபடி தொட்டது என்று அர்த்தம் தொனிக்கும்படி) " என்று புலம்பினாள்.

அங்கு வந்த அல்லமர், முக்தாயக்காவின் ஞானம் அந்த துன்பத்தில் அவளை தொடர்ந்து இருக்க விடாது என்று அறிந்து கொண்டார். அவளை பார்த்து "துன்பம் உன் மனதில் இல்லை. எதற்கு அழுகிறாய்? நீ யார்?" என்றார். அவள் பரம வேதாந்தமாக , "எனக்கு எந்த அடையாளமும் இல்லை. எனக்கு மனதில் சலனங்கள் இல்லை. நான் எந்த கருப்பையிலிருந்தும் வரவில்லை " என்று உயர்ந்த ஞானி போன்று பேசினாள். கூடவே மறுபடி "நான் அஜகண்ணருக்கு தமக்கை. அவர் மறைந்ததால் வருத்தத்தில் இருக்கிறேன்" என்றாள்.

முக்தாயக்காவின் அண்ணனான அஜகண்ணர் தேகாபிமானம் அற்ற ஒரு ஞானி என்றும், அவர் மறையாதவர் என்றும் சொல்லி அவளை தேற்ற பார்த்தார் அல்லமர். முக்தாயக்கா ஏற்று கொள்ளவில்லை. “பார்த்தேன், பார்க்கவில்லை, இணைந்தேன், பிரிந்தேன் என்பதெல்லாம் மாயை. மாயையை உண்மை என நினைத்து பயந்தால் அது நிச்சயம் துன்புறுத்தும்” என்று அல்லமர் மேலும் சொன்னார். உடனே முக்தாயக்கா "குரு இல்லாமல் ஞானம் உதிக்காது. நீர் முன்ஜென்மங்களில் குருவை உபாசித்திருக்கிறீர். அதனால்தான் இப்படி பேசுகிறீர் போலும். என் குரு பிரிந்தால் நான் வாடாமல் என்ன செய்வேன்?” என்றாள்.

அல்லமர் “குருவிற்கும் சீடனுக்கும் தொடர்பு இல்லை என்று எப்படி சொல்வாய்? மேலும் குரு உன்னுடன் இப்பொழுதும்

இருக்கிறார். அதை உணர்ந்து ஆனந்தம் பெறுவாய்" என்றார். முக்தாயக்கா இதையும் ஒப்புக்கொள்ளவில்லை. அல்லமர் வாதில் வெல்வதற்குத்தான் அப்படி பேசுகிறார் என்று சாடினாள். தன்னை பற்றி அவள் புரிந்து கொள்ள வேண்டும் என்பதற்காக , அல்லமர், தான், காற்று, அக்னி போன்ற பூதங்கள் சிருஷ்டிக்கப்படும் முன் பிறக்காமல் பிறந்ததாகவும், தான் தேக உணர்வற்றவன் என்றும், "ஞானிகள் சொல்வதை கேட்பது நல்லது" என்றும் சொன்னார்.

முக்தாயக்கா அதற்கு "உமது ஞானம் நன்றாக இருக்கிறது; நீர் இயங்கவில்லை என்று சொல்வதிலேயே இயக்கமும், நினைப்பதில்லை என்பதிலேயே நினைப்பும், தேக உணர்வு இல்லை என்பதிலேயே அப்படி ஒரு எண்ணமும் அந்த அனுபவ ஞாபகமும் இருக்கிறது! (இறைவன்) லிங்கம் உமது அங்கத்தில் கரைந்தார் என்கிறீர்! ஆனால் உமது உடம்பைத்தான் நான் காண்கிறேன்! உமக்கு ஞானம் எப்படி வந்தது? என்னை பொறுத்தவரை முழு ஞானம் பெற்றவர் ஒருவர் உண்டெனில் அவர் அஜகண்ணரே " என்றாள்.

அவளின் பதிலை கேட்ட அல்லமர் "ஞானானுபவம் கிடைக்கும் வரையில் இப்படி மனம் மயக்கத்தான் செய்யும். இருப்பினும், நீ குருவருளால் நல்ல ஞான நிலை அடைந்தவள். உனக்கு என் வணக்கம்" என்றார். அவள் மனதிலும் தான் யாரென்பதை ஒரு கணம் காண்பித்தார். முக்தாயக்காவிற்கு அல்லமர் ஒரு ஞானி என்று புரிந்தது. அவள் விழுந்து வணங்கினாள். சில மணி நேரம் அவளை துன்புறுத்திய அண்ணனின் மரணம் தற்பொழுது அவளிடமிருந்து நீங்கியது. அண்ணன் மறையவில்லை. அவன் மரணத்தை விட்டு பிறவாமையை எய்தினான் என்று உணர்ந்தாள். அல்லமரை புகழ்ந்து வாழ்த்தினாள் முக்தாயக்கா. இது வெறும் வாக்குவாதமாக அமையவில்லை; பேச்சினூடேயே முக்தாயக்காவிற்கு அனுபவத்தை அல்லமர் தந்து விட்டார். அதன்பின், அல்லமர் அங்கிருந்து சோனாலிகே என்ற ஊருக்கு சென்றார். அங்கு அவருக்கு முக்கிய வேலை ஒன்று காத்து இருந்தது.

(தொடரும்

மதுரமுரளி சந்தாதாரர் ஆக விரும்புகிறவர்கள் Guruji Sri Muralidhara Swamigal Mission என்ற பெயருக்கு 51, 7th Avenue, Ashok Nagar, Chennai - 83 என்ற முகவரிக்கு ரூ120/-ஐ (ஒரு வருட சந்தா) உள்ளூர் காசோலை / டி.டி. / மணியார்டர் அனுப்பவும். நேரில் ரொக்கம் கொடுத்தும் சந்தாதாரர் ஆகலாம். தங்களது முகவரியை மிகவும் தெளிவாக குறிப்பிடுமாறு கேட்டு கொள்கிறோம். ஏற்கனவே சந்தாதாரராக இருப்பவர்கள் தங்களது சந்தாவை புதுப்பிக்குமாறு கேட்டுக்கொள்கிறோம். மேலும் விவரங்களுக்கு அணுகவும்: PH: +91-44-24895875

Madhuramurali

- Published by V.Sankaran on behalf of Guruji Sri Muralidhara Swamigal Mission, Chennai - 83.
- Copyright of articles published in Madhuramurali is reserved. No part of this Magazine may be reproduced, reprinted or utilised in any form without permission in writing from the Publisher of Madhuramurali.
- Views expressed in Articles are those of the respective authors and do not reflect the views of the magazine.
- Advertisements in Madhuramurali are invited.

## ஸ்ரீஸ்வாமிஜியின் நிகழ்ச்சிகள்

| | |
|---|---|
| செப்டம்பர் 12 | சைதன்யகுடீரம் ஆண்டு விழா |
| அக்டோபர் 6 | விஜயதசமி - புரட்டாசி சிரவணம், ஸ்ரீனிவாசபெருமாள் அவதார தினம் |
| ஏகாதசி | செப்டம்பர் 8, 23, அக்டோபர் 7 , 23 |

ஸ்ரீஸ்வாமிஜி அவர்களுக்குத் தெரிவிக்க வேண்டிய விஷயங்களை
Dr.A.BHAGYANATHAN, Personal Secretary
to **HIS HOLINESS SRI SRI MURALIDHARA SWAMIJI**
New No. 51, Old No. 24, 7th Avenue, Ashok Nagar, Chennai - 83.
Tel. : +9144-2489 5875, Email : contact@namadwaar.org என்னும் முகவரிக்கு அனுப்பவும்.